RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 31 பிப்ரவரி.7 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# “அரசியல் தலைவர்களை தரக்குறைவாக தாக்குவதா?” முதல்வர் ஸ்டாலினுக்கு இபிஎஸ் கண்டனம்

சென்னை: பிப்.7-

அரசியல் ரீதியாக களத்தில் எதிர்த்து நிற்கும் அரசியல் தலைவர்களை தனிப்பட்ட முறையில் தாக்குவதும், தரக்குறைவாகப் பேசுவதும் ஸ்டாலினின் வாடிக்கையாகிவிட்டது என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “‘ஆனைக்கு அறம்’ என்றால் ‘குதிரைக்கு குர்ரம்’ என்று சொல்வதையும், ‘பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் ஸ்ரீ கொட்டைப் பாக்கின் விலை சொல்வதையும்’ வாடிக்கையாகக் கொண்ட தமிழகத்தின் ‘பொம்மை முதல்வர்’ ஸ்டாலின், ஆட்சி அதிகாரத்தில்தான் ஸ்டிக்கர் ஒட்டுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தால், அரசியல் ரீதியாக அதிமுக செயல்பாடுகளையும் கார்பன் காப்பி அடிக்கத் தொடங்கியிருப்பது, விலா நோக சிரிக்க வைக்கிறது.

2021 தேர்தல் நேரத்தில் திமுக சார்பில் ஸ்டாலின் அளித்த 525க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளில், நான்கில் ஒரு பங்கைக் கூட நிறைவேற்றவில்லை என்ற உண்மையை, மக்களுக்கு நாங்கள் நாள்தோறும் சொல்லி வருகிறோம். கவர்ச்சிகரமாக பல பெயர்களை வைத்து மக்களை ஏமாற்றும் இந்த விடியா அரசின் செயலை விளக்கும் வகையில், கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் ‘திமுகவின் உருட்டுக்கடை அல்வா’ ஒன்றை தமிழக மக்களிடம் வழங்கினோம்.

மத்திய அரசிடம் வாதாடியோ, போராடியோ, இணக்கமாகப் பேசியோ, தமிழக மக்களுக்குத் தேவையான எந்தவொரு நல்ல திட்டங்களையும் கொண்டுவர வக்கற்ற ஸ்டாலின் தலைமையிலான நிர்வாகத் திறனற்ற அரசு, மத்திய அரசு கேட்டதைத் தரவில்லை என்று வாய் ஜாலம் காட்டிக்கொண்டிருக்கிறது.



கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு முறையாக திட்ட அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கத் தவறிய திராணியற்ற ஸ்டாலின் தலைமையிலான அரசு, தங்களுடைய இயலாமையை, தோல்வியை மறைக்க, மத்திய அரசு போதிய நிதியை தமிழகத்திற்கு தரவில்லை; ரயில்வே திட்டங்கள் வரவில்லை என்றெல்லாம் புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டு மக்களுக்கு நிஜமாக அல்வா கொடுக்கும் பம்மாத்து வேலையை அரங்கேற்றி வருகிறது.

ஏமாற்று மாடல் திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் நாளை எதிர்பார்த்து தமிழக மக்கள் ஆவலோடு காத்திருக்கும் நிலையில், மீண்டும் ஆட்சிக்கு வருவோம்; திமுகவின் 2.0 ஆட்சியில் தமிழகம் சுபிட்சம் பெறும் என்றெல்லாம் மக்களின் காதுகளில் காகிதப் பூ சுற்றி வருகிறார் ஸ்டாலின்.

‘பேஸ்மென்ட் வீக் ஸ்ரீ பில்டிங் ஸ்டிராங்’ என்று ஒரு படத்தில் வரும் நகைச்சுவை காட்சியைப் போல, இவருடைய ஆட்சியே ஆட்டம் கண்டு இன்றோ, நாளையோ என்று ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில், காலையில் எழுந்தவுடன் மேக்கப் போட்டுக்கொண்டு, கண்ணாடி முன் நின்று வெற்றி, வெற்றி என்று இம்சை அரசின் 23ம் புலிகேசி போல் ஸ்டாலின் கூக்குரல் இட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, தமிழக மக்கள் கைகொட்டி சிரிக்கிறார்கள்.

வரும் சட்டமன்றத் தேர்தலில் தனக்கு தோல்வி நிச்சயம் என்பதை ஸ்டாலின் நன்கு உணர்ந்துள்ளார். அதன் விளைவு, அரசியல் ரீதியாக, தர்க்க ரீதியாக, நாகரீகமாக களத்தில் எதிர்த்து நிற்கும் அரசியல் தலைவர்களை தனிப்பட்ட முறையில் தாக்குவதும், தரக்குறைவாகப் பேசுவதும், ஒருவரை அசிங்கப்படுத்தி விட்டால், அவர்கள் மானத்திற்கு பயந்து களத்தில் இருந்து ஓடிவிடுவார்கள் என்று அல்பத்தனமாக கருதுவதும் ஸ்டாலினின் வாடிக்கையாகிவிட்டது.

‘சேற்றிலும், அசிங்கத்திலும் கல் வீசினால் அந்த சேறும், அசிங்கமும் தன்மீதுதான் படும்’ என்பதையும்; ‘மல்லாந்து படுத்து எச்சில் துப்பினால் அது தன் மார்பில் தான் விழும்’ என்பதையும் உணராமல், தான் வகிக்கும் பதவிக்கு உள்ள கவுரவத்தையும், மரியாதையையும், தகுதியையும் எண்ணிப் பார்க்காமல் உளரித் திரிவதை, ஸ்டாலின் இத்தோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழக மக்களை, தேர்தல் களத்தில் நெஞ்சுரத்தோடு தலை நிமிர்ந்து அதிமுக சந்திக்கும். எங்களுடைய ஆட்சியின் மாட்சிமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி வாக்கு சேகரிக்கும் வல்லமை எங்களுக்கு உண்டு. நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், கள்ளமில்லா உள்ளமும் கொண்டவர்கள் நாங்கள். கடந்த ஐந்தாண்டுகால விடியா திமுக ஆட்சியில், ஒருசில மக்களின் நாக்கில் தேன் தடவும் வேலையைத் தவிர, தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை செயல்படுத்தி உள்ளீர்கள் என்பதை வெளிப்படையாக மக்களிடம் தெரிவித்து, ஓட்டு கேட்க ஸ்டாலின் தயாரா? அப்படி அவர் களத்திற்கு வந்தால், அவருக்கு கிடைக்கப் போவது 2.0 அல்ல ஸ்ரீ வெறும் ‘0’தான்” என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## குடமுழுக்கில் யாருக்கும் முதல் மரியாதை இல்லை: உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு



மதுரை: பிப்.7-

மேலப்பனங்காடி கிராமத்தில் உள்ள அய்யனார் கோயில், முனியாண்டி சுவாமி கோயில், அருள்மிகு கருப்பசாமி கோயில், முத்துமாரியம்மன் கோயில் குடமுழுக்கில் யாருக்கும் முதல் மரியாதை அளிக்கக் கூடாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த ரத்தினம் என்பவர் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், ”மதுரை மாவட்டம் மேலப்பனங்காடி கிராமத்தில் உள்ள அய்யனார் கோயில், முனியாண்டி சுவாமி கோயில், அருள்மிகு கருப்பசாமி கோயில், முத்துமாரியம்மன் கோயில் குடமுழுக்கை நடத்துவதற்காக முத்தரையர், மறவர், மற்றும் ஆதி திராவிடர் சமூக உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்க உத்தரவிட வேண்டும்” என்று கோரி இருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஸ்ரீமதி, "மதுரை மாவட்டம் மேலப்பனங்காடி கிராமத்தில் அமைந்துள்ள இந்த கோயில்களுக்கான குடமுழுக்கு பிப்ரவரி 8ம் தேதி நடைபெற உள்ளது. இந்த கோயில்கள் அனைத்தும் ஒரே கிராமத்தில் அமைந்துள்ளன.

அந்த கிராமத்தில் 5 சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், இந்து சமய அறநிலையத்துறை தகுதியான நபர் ஒருவரை நியமிக்க உத்தரவிட்டது. அதன் அடிப்படையில் நபர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

இதனிடையே, ராஜேஷ் கண்ணன் என்பவர் குடமுழுக்கு நடத்த உரிமை கோரி உள்ளார். ஆனால் குடமுழுக்கு என்பது தனி நபரால் நடத்தப்படக்கூடாது.

குறிப்பாக ஐந்து சமுதாய மக்கள் இருக்கையில், குழு அமைக்கப்படுவது அவசியமானது. ஆகவே இந்து சமய அறநிலையத் துறையால் நியமிக்கப்பட்ட நபர், ஒவ்வொரு சமுதாயத்தில் இருந்தும் ஒரு நபரை உறுப்பினராக கொண்ட குழுவை அமைக்க வேண்டும். குழுவோடு இணைந்து குடமுழக்கை நடத்த வேண்டும்.

விழாவில் தனி நபருக்கோ அல்லது சமூகத்திற்கோ முதல் மரியாதை வழங்கப்படக்கூடாது. எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். ராஜேஷ் கண்ணன் இந்து சமய அறநிலையத் துறையால் நியமிக்கப்பட்ட நபரிடமும், அவர் அமைக்கும் குழுவிடமும் குடமுழுக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்" என உத்தரவிட்டு வழக்கை நீதிபதி முடித்து வைத்தார்.



■ திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், அவர்கள்"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் வந்தவாசி நகராட்சியில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக சாலை மேம்பாட்டு பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் வாய்கால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## “மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு எந்த திட்டமும் அறிவிக்கப்படவில்லை’’ : உதயநிதி ஸ்டாலின்

தஞ்சாவூர்: பிப்.7-

மத்திய அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு எந்த ஒரு திட்டமும் அறிவிக்கப்படவில்ஜைல என்றும், தமிழ்நாடு என்ற பெயரே இல்லாமல் வஞ்சிக்கப்பட்டுள்ளது என்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சாவூரில் நேற்று காலை ((பிப்.6) முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம் இல்லத் திருமண விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார்.



பின்னர் நிகழ்ச்சியில் பேசிய அவர் கூறியதாவது: “தஞ்சாவூர் மாவட்டம் எப்படி திராவிட இயக்கத்துக்கு செல்வாக்கான ஒரு மாவட்டமோ, அதேபோல கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் செல்வாக்கான மாவட்டம். அப்படிப்பட்ட திராவிட இயக்கமும், கம்யூனிஸ்ட் இயக்கக் குடும்பமும் இணைகிற விழாவாக, ஒரு சிறப்பான நிகழ்ச்சியாக இந்தத் திருமணம் இங்கே நடைபெற்றிருக்கின்றது.

இன்றைக்கு முதல்வர் ஸ்டாலின் "மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், மகளிர் உரிமைத் தொகை" என மகளிருக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். இப்படி பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருவதால், தமிழ்நாடு இந்தியாவிலேயே வளருகின்ற மாநிலங்களில் 11.19 சதவீத வளர்ச்சியோடு முதல் மாநிலமாக தற்போது விளங்கி வருகின்றது.

இதையெல்லாம் பொறுக்க முடியாத மத்திய பாஜக அரசு, இன்றைக்குப் பல்வேறு வகையில் தமிழ்நாடு அரசுக்குத் பல தொல்லைகளைக் கொடுத்து வருகிறது. நிதி உரிமையைப் பறிப்பது, மொழி உரிமையைப் பறிப்பது, மீண்டும் புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து இந்தியையும் சமஸ்கிருதத்தையும் தமிழக மாணவர்கள் மீது திணிப்பது என செயல்படுகின்றனர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு அறிவித்த மத்திய பட்ஜெட்டில், தமிழ்நாட்டுக்கு எந்த ஒரு திட்டமும் இல்லை. பழனி மாணிக்கம் மத்திய நிதித்துறை இணை அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்தவர். ஆனால் இப்போதுள்ள மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்று பெருமையாக சொல்லுவார், ஆனால் தமிழ்நாட்டுக்கு எந்த ஒரு திட்டத்தையும் அறிவிக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாடு என்கிற வார்த்தையே பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. இப்படி மத்திய அரசு தமிழ்நாட்டைப் பல வகைகளில் வஞ்சித்து, பல்வேறு இடைஞ் சல்களைக் கொடுத்து வருகின்றது. இதையெல்லாம் கண்டிக்க வேண்டிய ஒரு எதிர்கட்சித் தலைவர் இருக்கின்றார். மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டைப் படிச்சு முடிக்கிறதுக்கு முன்னாடியே, மிகச் சிறந்த பட்ஜெட் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

முரட்டு பக்தர்களைக் கேள்விப்பட்டிருப்பீங்க, முரட்டு அடிமைகளைப் பார்த்திருக்கீங்களா? பாஜகவுடைய ஒரு முரட்டு அடிமையாக இன்றைக்கு எடப்பாடி பழனிசாமி திகழ்ந்து இந்த பட்ஜெட்டை வரவேற்றிருக்கிறார். இப்படி எத்தனை அடிமைகள் வந்தாலும் சரி, பழைய அடிமைகள், புதிய அடிமைகள் வந்தாலும் சரி, நிச்சயம் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகள் திமுக வெற்றி பெற்று, தலைவர் ஸ்டாலின் மீண்டும் முதல்வராக அமரப் போவது உறுதி.


அதற்கான தொடக்கமாக இந்த தஞ்சாவூர் மாவட்டம் நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. திமுக 7வது முறையாக ஆட்சி அமைக்க வேண்டுமானால், ஸ்டாலின் முதல்வராக நாற்காலியில் அமர வேண்டுமானால், அடுத்த இரண்டு மாதங்களுக்கு இங்கே வந்திருக்கக்கூடிய திமுக நிர்வாகிகள், கடுமையாக உழைக்க வேண்டும்’’ என்றார்.

இவ்விழாவில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி.செழியன், முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம், எம்.பிக்கள் ச.முரசொலி, சு.கல்யாண சுந்தரம், முன்னாள் எம்.பி டி.கே.ரெங்கராஜன், எம்எல்ஏக்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், சாக்கோட்டை க.அன்பழகன், நா.அசோக் குமார், கா.அண்ணா துரை, பூண்டி கலைவாணன், முத்து ராஜா, உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விருதுநகரில் முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சி முக்கிய அறிவிப்பு காத்திருக்கிறது என தங்கம் தென்னரசு பேட்டி

விருதுநகர்: பிப்.7-

விருதுநகர் அருகே ஒரு லட்சம் பேர் பங்கேற்கும் திமுக இளைஞரணி தென் மண்டல நிர்வாகிகள் கூட்டம் நாளை (பிப். 7) நடைபெறுகிறது. முதல்வர் மு.க. ஸ்டாலின் பங்கேற்கும் இந்த கூட்டத்தில் முக்கிய அறிவிப்பு காத்திருப்பதாக அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்துள்ளார்.




இதுகுறித்து விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசு அளித்த பேட்டியில், ‘‘விருதுநகர் அருகே கல்குறிச்சியில் திமுக தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது. இதில் திண்டுக்கல் முதல் கன்னியாகுமரி வரை தென் தமிழகத்தில் உள்ள 10 மாவட்டங்களைச் சேர்ந்த திமுக இளைஞரணி நிர்வாகிகள் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்க உள்ளனர். தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமை வகித்து உரையாற்றுகிறார்.

இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் மாநாடு போல் நடைபெறும். அமைச்சர்கள் பலரும் கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் பங்கேற்கின்றனர். அரசு ஆணைப்படி அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளிலும் முறையாக அனுமதி பெற்று இந்த மாநாடு நடத்தப்படுகிறது. மாநாட்டுக்கு வரும் அனைவருக்கும் குடிநீர், வாகன வசதி, மின்விளக்கு, உணவு, கழிப்பறை உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மருத்துவ குழுவினரும் தயார்படுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் காலம் என்பதால் எத்தகைய தகவல்களை இந்த மாநாட்டில் முதல்வரும் துணை முதல்வரும் தெரிவிக்கிறார்கள் என்பதை எதிர்பார்க்கலாம். தேர்தலை ஒட்டி மிகப்பெரிய செய்தி இருக்கும்’’ என்று கூறினார்.



# பர்கூரில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியினர் 30க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, பிப்.7-

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி, பர்கூர் ஒன்றியத்தில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியை சேர்ந்த ஒன்றிய செயலாளர் திருப்பதி, நகர இளைஞர் அணி செயலாளர் கிருபாகரன் ஆகியோர் தலைமையில், 30 க்கும் மேற்பட்டோர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் (அதிமுக) தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்த இணைப்பு நிகழ்ச்சி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமார் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது. அதிமுக துணை பொதுச்செயலாளரும், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.முனுசாமி அவர்களின் முன்னிலையில், புதிதாக இணைந்தவர்களுக்கு கட்சியின் அடையாளமான சால்வை அணிவித்து வரவேற்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய கட்சி தலைவர்கள், அதிமுகவின் மக்கள் நலன் சார்ந்த கொள்கைகள் மற்றும் புரட்சித்தலைவி அம்மா ஜெயலலிதா அவர்களின் திட்டங்கள் மீது மக்களின் நம்பிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவித்தனர். இதன் காரணமாகவே பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் அதிமுகவில் தங்களை இணைத்துக் கொள்வதாகவும் கூறினர்.

இந்த இணைப்பின் மூலம் பர்கூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுகவின் அமைப்பு மேலும் வலுப்பெறும் என கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# கிருஷ்ணகிரி மாவட்ட தீயணைப்பு நிலையங்களில் தனியார் நிறுவன செக்யூரிட்டிகளுக்கு தீயணைப்பு மீட்பு பயிற்சி : 9ஆம் தேதி நடைபெறுகிறது

கிருஷ்ணகிரி, பிப்.07-

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை இயக்குனரின் உத்தரவுப்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் செக்யூரிட்டிகளுக்கு அடிப்படை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் குறித்த பயிற்சி, வருகிற 09.02.2026 அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெற உள்ளது என மாவட்ட தீயணைப்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, ஓசூர், சிப்காட், பர்கூர், போச்சம் பள்ளி, ராயக்கோட்டை, ஊத்தங்கரை, சூளகிரி மற்றும் தேன்கனிக்கோட்டை ஆகிய 8 தீயணைப்பு மற்றும் மீட்பு பணிநிலையங்களில் இந்த பயிற்சி ஒரே நேரத்தில் நடத்தப்பட உள்ளது.

இந்த பயிற்சி யில் தனியார் மருத்துவமனைகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வங்கிகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட இடங்களில் காவலாளிகளாக பணிபுரிந்து வருபவர்களுக்கு தீயணைப்பு கருவிகளை பயன்படுத்தி தீயை கட்டுப்படுத்தி முழுமையாக அணைப்பது, தீ விபத்துகளின் அடிப்படை அறிவியல், அடுக்குமாடி கட்டிடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் அங்கு பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பாக மீட்பது குறித்த அடிப்படை நடைமுறை பயிற்சிகள் செய்து காண்பிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் வகுப்பறை விளக்கங்களும், செயல்முறை விளக்கங்களும் அளிக்கப்படும். எனவே, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் செக்யூரிட்டிகள் அனைவரும் அருகிலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணிநிலையங்களில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று பயன்பெறலாம் என மாவட்ட தீயணைப்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.



# வருகிற சட்டசபை தேர்தல் ஆரியம் - திராவிடத்திற்கு இடையேயானது கிருஷ்ணகிரியில் கி.வீரமணி பேச்சு

கிருஷ்ணகிரி, பிப்.07-

வருகிற 2026 சட்டசபை தேர்தல் ஆரியம் மற்றும் திராவிடத்திற்கு இடையேயான முக்கியமான தேர்தலாக இருக்கும் என திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் "இது தான் ஆர்.எஸ்.எஸ்-பா.ஜனதா ஆட்சி; இது தான் திராவிடம் - திராவிட மாடல் ஆட்சி" என்ற தலைப்பில் நேற்று கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கி.வீரமணி பேசியதாவது:

நடைபெற உள்ள 2026 சட்டசபை தேர்தல் மிக முக்கியமானது. இது ஆரியம் ஸ்ரீ திராவிடத்திற்கு இடையேயான தேர்தல். ஆர்.எஸ்.எஸ். தொடங்கிய நாள் முதலே ரகசிய அமைப்பாக செயல்பட்டு வருகிறது. அதன் தலைவர் எங்கு வருகிறார், எங்கு செல்கிறார் என்பதே யாருக்கும் தெரியாது.

இந்துத்துவா, சனாதனம் என்ற பெயரில் சாதி, மத வேறுபாடுகளை வளர்த்தும், பெண்களை அடிமைப்படுத்தியும் ஆர்.எஸ்.எஸ். செயல்பட்டு வருகிறது. இதற்கு எதிராக உண்மைகளை எடுத்துச் சொல்லவே திராவிட மாடல் ஆட்சி உருவானது.

திராவிட இயக்கத் தலைவர்கள் பல்வேறு போராட்டங்களின் மூலம் அனைவருக்கும் கல்வி, சம உரிமை, சொத்துரிமை, மனித உரிமைகளைப் பெற்றுத் தந்துள்ளனர்.

தற்போது திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெற்றிடமாக இல்லாமல், அனைவரும் கற்றுக் கொள்ளும் கற்றிடமாக செயல்பட்டு வருகிறார்.

தி.க. மற்றும் தி.மு.க. இரட்டை குழல் துப்பாக்கி போல இருந்தாலும், திராவிடர் கழகம் தி.மு.க.வை கட்டுப்படுத்துவதில்லை. ஆனால் பா.ஜனதா ஆட்சியை ஆர்.எஸ்.எஸ். மூக்கணாங்கயிறு போட்டு கட்டுப்படுத்துகிறது. மற்ற கட்சிகள் தன்மானத்தை அடகு வைக்கின்ற நிலையில், திராவிட மாடல் அரசு தன்மானத்தை காக்கும் அரசாக உள்ளது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. செங்குட்டுவன், தி.மு.க. நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, திராவிடர் கழக மாவட்ட தலைவர் திராவிடமணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கண்காணிப்பு அலுவலர்கள் / உதவி கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் / உதவி மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத்சிங் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. பி.சினேஹாப்ரியா, முன்னிலையில் நடைபெற்றது.




# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் புனித தோமையார்மலை வடக்கு ஒன்றியம் சார்பில் கழக செயல்வீரர்கள் கூட்டம் மூவரசம்பட்டில் நடைபெற்றது

தாம்பரம் பிப்.7-

சென்னை அடுத்த மூவரசம்பட்டில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் புனித தோமையார்மலை வடக்கு ஒன்றியம் சார்பில் கழக செயல்வீரர்கள் கூட்டம் கழக ஒன்றிய செயலாளரும், மூசரசம்பட்டு ஊராட்டிமன்ற தலைவருமான நி.ரி.ரவி என்ற விவேகானந்தன் தலைமையில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் தொகுதி சடமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் ஜெயக்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் வனஜாதயாளன், அனிதா இளங்கோவன், உஷாமாரிமுத்து, ஜனனி சுரேஷ்பாபு உட்பட மூவரசம்பட்டு ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் வருகின்ற தேர்தலில் கடினமான உழைத்து மக்களை நேரில் திமுக ஆட்சியில் கழக தலைவர் கொண்டுவந்த நலதிட்டங்களை எடுத்து கூறி மீண்டும் திமுக ஆட்சியை கொண்டு வந்து கழக தலைவரை இரண்டாவது முறையாக முதலமைச்சராக்க வேண்டும் எனவும் கட்சி பணிகளை வேகமாகவும், பொறுப்பாகவும் செய்ய வேண்டும் எனவும் பஜக கட்சி தனது கூட்டணியில் 100 கோடி ஊழல் செய்தவர்களுடன் கைகோர்த்து நின்று திமுகவை பார்த்து ஊழல் கட்சி என தெரிவிக்கின்றனர் என கூறினார். செயல் வீரர்கள் கூட்டத்தில் ஏராளமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

இறுதியில் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அன்பு பிரபாகரன் நன்றி உரையாற்றினார்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வருவாய் கூட்டரங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சி, புத்தாக்கம், வாழ்வாதாரங்கள், நிலைத்தன்மை பற்றி கலந்துரையாடினார் . உடன் மாவட்ட ஆட்சி தலைவர், துணைமேயர், மாநில மகளிரணி செயலாளர் பேருராட்சி தலைவர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள்,கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உலக தர உணவு சேவை மற்றும் சூழலியல் சுற்றுலா திறன்பயிற்சி

புதுக்கோட்டை, பிப்.7-

புதுக்கோட்டை மாவட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உலக தர உணவு சேவை மற்றும் சூழலியல் சுற்றுலா திறன்பயிற்சி (Global Food & Beverage Service Eco.Tourism) உயர் தொழில் நுட்ப AI பயிற்சி (Advanced Artificial Intelligence (AI)) ஆடை வடிவமைப்பு(ம) மேலாண்மை திறன் பயிற்சி (Apparel & Designing Management) மற்றும் அழகுக்கலை(ம) சிகை அலங்கார மேலாண்மை திறன்(Glam and Cosmetology Salon Management) ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.



இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சாரந்தவர்களாகவும், உலக தர உணவு சேவை மற்றும் சூழலியல் சுற்றுலா திறன் பயிற்சி(Global Food & Beverage Service Eco.Tourism) உயர் தொழில் நுட்ப கிமி பயிற்சி (Advanced Artificial Intelligence (AI)) போன்ற பயிற்சிகளுக்கு 18 முதல் 25 வயது வரை உள்ளவர்களாகவும் கல்வி தகுதியாக பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் ஆடை வடிவமைப்பு (ம)மேலாண்மை திறன் பயிற்சி (Apparel & Designing Management) மற்றும் அலகு கலை (ம) சிகை அலங்கார மேலாண்மை திறன் பயிற்சி (Glam and Cosmetology Salon Management) போன்ற பயிற்சிகளுக்கு 18 முதல் 40 வயது வரை உள்ளவர்களாகவும் கல்வி தகுதியாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும் இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

இப்பயிற்சியினை பெற தாட்கோ இணையத்தளமான (www.tahdco.com) என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சிக்கான கால அளவு மூன்று மாதங்கள் ஆகும்.மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சியர் மு.அருணா, தெரிவித்துள்ளார்.




■ புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், தேனிமலை கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில்,தமிழ்நாடு முதலமைச்சர் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நேற்று (06.02.2026) நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# தாராபுரம் நகர்மன்ற கூட்டத்தில் 63 தீர்மானங்கள் நிறைவேற்றம் : திடக்கழிவு மேலாண்மை, தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வசதி, மழைநீர் வடிகால் சீரமைப்புக்கு அனுமதி

திருப்பூர், பிப்.7-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் இன்று நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு நகராட்சி ஆணையாளர் முஸ்தபா தலைமை வகித்தார். நகர்மன்ற தலைவர் கு. பாப்பு கண்ணன் முன்னிலை வகித்தார். தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுகளைச் சேர்ந்த கவுன்சிலர்களில் 27 பேர் கலந்து கொண்டனர்.



இந்த கூட்டத்தில் தாராபுரம் நகராட்சி பகுதிகளில் சாக்கடை வசதி, தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் விநியோகம், பேருந்து நிலையத்தில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டிடங்களை வாடகை ஒப்பந்த அடிப்படையில் ஏலம் விடுவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய பொருள்கள் விவாதிக்கப்பட்டன. 30 வார்டு பகுதிகளிலும் குடிநீர் தேவைகள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதி குறைபாடுகளுக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க தீர்மானிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மொத்தம் 63க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நகராட்சியில் பொதுசுகாதார பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. நகர எல்லைக்குள் உள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இருந்து தினசரி சுமார் 19.02 மெட்ரிக் டன் குப்பைகள் உற்பத்தியாகி வருகிறது. இதில் 3.50 மெட்ரிக் டன் உலர் கழிவுகள் நஞ்சியம்பாளையத்தில் உள்ள வளமீட்பு மையத்தில் பேலிங் செய்து சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு எரிபொருளாக அனுப்பப்படுகிறது. இந்த பணிக்காக முன்பே அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.9.90 லட்சம் தொகை முடிவடையும் நிலையில் உள்ளதால், மேலும் மூன்று மாத காலத்திற்கு பழைய விகிதத்திலேயே பணி நீட்டிப்பு வழங்க ரூ.5 லட்சம் கூடுதல் செலவினத்திற்கு மன்ற அனுமதி கோரப்பட்டது. இதனை பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கியது.

தாராபுரம் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள காலை உணவு வழங்கும் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. நகராட்சி அலுவலகம், புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு மேல்நிலை தொட்டி வளாகம், ஜின்னா மைதானம் மேல்நிலை தொட்டி வளாகம், தினசரி மார்கெட் மேல்நிலை தொட்டி வளாகம் ஆகிய இடங்களில் பணியாளர்கள் உணவு அருந்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு பாத்திரங்களை கழுவ வசதியாக குழாய்கள் மற்றும் சிங்குகள் அமைக்க ரூ.1.20 லட்சம் செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டது. இந்த செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேபோல் தாராபுரம் நகராட்சி வார்டு எண் 22 க்கு உட்பட்ட ஆசிரியர் காலணி பகுதியில் மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்துள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார். நகர்மன்ற தலைவர் பரிந்துரையின் பேரில் நேராய்வு செய்யப்பட்டு, மழைநீர் வடிகாலை சீரமைக்க ரூ.4.90 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கியது.

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தாராபுரம் நகராட்சி பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையில் அமையும் என நகர்மன்ற தலைவர் தெரிவித்தார்.

# பம்மல் வடக்கு மற்றும் தெற்கு பகுதி கழக திமுக சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்

பம்மல் பிப்.7-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பம்மல் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகழக திமுக சார்பில் செயவீர்கள் கூட்டம் தெற்கு பகுதி செயலாளரும் மண்டல குழுத் தலைவருமான வே.கருணாநிதி தலைமையில் வடக்கு பகுதி செயலாளர் ஜெய்க்குமார் ஏற்பாட்டில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. செயல் வீரர்கள் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் தா.மோ அன்பரசன், மேயர் வஸந்தகுமாரி, துனை மேயர் காமராஜ், மாநில தகவல் தொழிநுட்ப அணி துனை செயலாளர் தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசுகையில் மாவட்ட கழக சார்பில் திருவடந்தையில் நடைபெறும் மாநாட்டிற்கு 49 தொகுதியில் இருந்து 1.75 லட்சம் பேர் கலந்து கொள்ள உள்ளனர். கூட்டத்திற்கு 3 மணிக்குள் வரவேண்டும் எனவும் தலைவர் பேசிய முடிந்த பின்னரே கூட்டம் கலைய வேண்டும் எனவும் தினமும் காலையில் சென்று சாலையில் உள்ள குப்பைகள் அகற்றுதல், குடிநீர் வருகிறதா எனவும் சாலையி உள்ள சிறு பல்லங்களை சரிசெய்து மக்களின் பிரச்சனையை கேட்டறிய வேண்டும் எனவும் எதிர்கட்சியினர் புஸ்பானம் போன்றவர்கள் எனவும் அதிமுகவையும் பஜக வையும் ஒழித்துகட்ட தலைவர் முடிவெடுத்துள்ளார் தலைவர் எனவும் திமுக கட்சி உயிரோட்டமுடன் உள்ளது. நடிகர் கட்சி சென்றவர்கள் எல்லாம் அணி அணியாக திமுகவில் சேர்ந்து வருகின்றனர். வட்டகழக செயலாளர்கள் பொறுப்புடன் பணிசெய்து வருகின்ற தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என பல்வேறு ஆலோசனையும், அறிவுறுகளையும் வழங்கி 7 வது முறையாக திமுக ஆட்சி வெற்றிபெற வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக மறைந்த கழக நிர்வாகிகளுக்கு இரங்கல் செய்தியுடன் மௌன அஞ்சலி செலுத்தினர். இதில் மாமன்ற உறுப்பினர்கள் மதினாபேகம், டில்லி கல்யாணி, சத்யா மதியழகன், சித்ராதமிழ்குமரன் ரம்யா சத்ய பிரபு, சித்ராதேவிமுரளிதரன், சண்முகசுந்தரி ஜெய்குமார், கலைவாணிபிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார் உட்பட பம்மல் தெற்கு, வடக்கு பகுதிகழக திமுக நிர்வாகிகள் 1000 த்திற்க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை சார்பில் தல்லாகுளம் அருகில் அதி நவீன உணவு பகுப்பாய்வுப் பிரிவில் புதிய நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடத்தினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார்.மதுரை மாநகராட்சி வார்டு எண் 31 மாமன்ற உறுப்பினர் தல்லாகுளம் முருகன்உடனிருந்தார்.



■ மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துவாத சாந்தம் மாநாட்டு மையத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு விழாவை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,துவக்கி வைத்து வளைகாப்பு சீர்வரிசைகள் வழங்கினார்.மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன்,இ.ஆ.ப., , ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.வானதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.

# “டாஸ்மாக் ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்” டிடிவி தினகரன்

சென்னை, பிப்.7-

தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் டாஸ்மாக் ஊழியர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசு முன்வர வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுடன் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் டாஸ்மாக் ஊழியர்களின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் முத்துச்சாமி நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில்



முடிவடைந்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாடு டாஸ்மாக் மதுபானக் கடைகளில் ஏற்கனவே நிலவும் ஊழியர்கள் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்காத டாஸ்மாக் நிர்வாகம், தற்போது மதுபான காலி பாட்டில்களையும் திரும்பப் பெற வேண்டும் என்ற பணிச்சுமையையும் ஏற்றியிருப்பது டாஸ்மாக் பணியாளர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, குறைவான ஊதியம் மற்றும் பணிப்பாதுகாப்பற்ற சூழலில் பணியாற்றி வரும் டாஸ்மாக் ஊழியர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டிய திமுக அரசு, காவல்துறையை ஏவி அவர்கள் மீது அடக்குமுறையைக் கையாள முற்படுவது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் டாஸ்மாக் ஊழியர்களின் பிரதிநிதிகளை மீண்டும் அழைத்துப் பேசி, அவர்களின் நியாயமான கோரிக்கைகளான பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் ஆகியவற்றை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும் என டாஸ்மாக் நிர்வாகத்தையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன் ” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பணிக்காலத்தில் உயிரிழந்த வாரிசுதாரர்கள் 19 பேருக்கு பணி நியமன ஆணை: அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்

சென்னை, பிப்.7-

பணிக்காலத்தில் உயிரிழந்த வாரிசுதாரர்கள் 19 பேருக்கு பணி நியமன ஆணைகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார். மாநகர் போக்குவரத்து கழக தலைமை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், போக்குவரத்து கழகத்தில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், ஓட்டுநர் (1) மற்றும் நடத்துனர் (18) என மொத்தம் 19 நபர்களுக்கு பணிக்கான நியமன ஆணைகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

ஏற்கனவே, மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து, பணியின்போது இறந்த பணியாளர்களின் 227 வாரிசுதாரர்களுக்கு பணிக்கான நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக 19 வாரிசுதாரர்களுக்கு பணிக்கான நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் பிரபுசங்கர், இணை மேலாண் இயக்குநர் சுந்தரபாண்டியன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.




■ தமிழரின் அடையாளத்தை பாதுகாத்திடும் வகையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கும் துறை அமைச்சர் சக்கரபாணி அவர்கள் தலைமையில் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சட்டமன்றத் தொகுதி சாணார்பட்டி கொசவப்பட்டியில் நடைபெற்ற தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை துவக்கி வைத்தார்.

# கிருஷ்ணகிரியில் TNPSC குரூப் II / IIA முதன்மைத் தேர்வு - 8ம் தேதி

கிருஷ்ணகிரி, பிப்.7-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II (குரூப் II / IIA சேவைகள்) முதன்மை எழுத்துத் தேர்வு, 08.02.2026 அன்று கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.



முற்பகல் 9.30 முதல் 12.30 மணி வரை ஓஎம்ஆர் முறையிலும், பிற்பகல் 2.30 முதல் 5.30 மணி வரை விளக்கவுரை (Descriptive) முறையிலும் தேர்வு நடைபெறுகிறது. இதில் OMR முறையில் 113 பேரும், Descriptive முறையில் 116 பேரும் தேர்வு எழுத உள்ளனர்.

தேர்வர்களுக்கான அடிப்படை வசதிகள், தடையில்லா மின்சாரம் மற்றும் சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அனுமதி சீட்டில் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாக தேர்வுக்கூடங்களுக்கு வர வேண்டும் என்றும், தாமதமாக வருபவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.



# தவெகவில் விருப்ப மனு விநியோகம் தொடக்கம்

சென்னை, பிப்.7-

தமிழக வெற்றிக் கழகத்தில் விருப்ப மனுக்களை வினியோகிக்கும் பணி தொடங்கியது. சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விருப்ப மனுக்களை பெற நிர்வாகிகள் குவிந்து வருவதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசியல் களம், 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு ஆயத்தமாகி வருகிறது. இந்நிலையில், தவெக சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்புவோருக்கு முதல் விருப்ப மனு விநியோகம் தொடங்கப்பட்டுள்ளது.

விருப்ப மனுக்களை பிப்.14 ஆம் தேதி வரை தவெக தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அக்கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவெக பொதுச் செயலாளர் என். ஆனந்த், தவெக மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ. செங்கோட்டையன் உள்ளிட்டோர் ரூ. 100 செலுத்தி தங்களது விருப்ப மனுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

பனையூரில் நாளை முதல் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை விருப்ப மனுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். மனுவில் உள்ள அனைத்து விவரங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும் என்று தவெக சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பனையூர் அலுவலகத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விருப்ப மனுக்களைப் பெற நிர்வாகிகள் குவிந்து வருவதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், தங்களுக்கு இடையூறு ஏற்படுவதாக அப்பகுதி மக்களில் சிலர் புகார் தெரிவித்துள்ளனர்.

# பழனியைச் சேர்ந்த மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் தமிழக வெற்றிக்கழக போட்டியிடுவதற்கான சட்டமன்ற தொகுதிக்கான விருப்பமனுவை பெற்றுக் கொண்டார்

திண்டுக்கல், பிப்.7-

திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் தமிழக வெற்றி கழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்ப மனுவை தலைமைச் செயலகத்தில் பெற்றுக்கொண்டார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர்களை அக்கட்சியின் தலைவர் விஜய் தனித் தனியாக நேர்காணல் செய்தே தேர்வு செய்வார் எனத் தகவல்.



அதனைத் தொடர்ந்து தவெகவின் சார்பில் 234 தொகுதிகளிலும் போட்டியிடுபவர்கள் விருப்பமுனு தரப்பட்டுள்ளது

அதிலிருந்து பெறப்படும் விருப்ப மனுக்களின் இறுதி பட்டியலை தலைமை நிலைய குழுவினர் விஜய்க்கு வழங்குவார்கள்.

அதில் இடம்பெற்றிருக்கும் நபர்களை தொகுதி வாரியாக தனித்தனியாக விஜய் நேர்காணல் செய்து அவரே வேட்பாளர்களை தேர்வு செய்வார் என தகவல். பழனி சட்டமன்ற தொகுதியில் ஐந்து ஆறு நபர்கள் விருப்பமுனை பெற்றதாக தகவல்.

# பதிவு மூப்பு பட்டம் மற்றும் பட்டய பொறியாளர்கள் நல சங்கத்தின் சார்பில் நீதிமன்ற உத்தரவினை அமல்படுத்த கோரி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை பிப்.7-

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் பதிவு மூப்பு பட்டம் மற்றும் பட்டய பொறியாளர்கள் நல சங்கத்தின் சார்பில் முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலத் தலைவர் பொறியாளர் வி. சிவகுமார் அவர்கள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் சங்கத்தின் மாநில தலைவர் சிவகுமார் அவர்கள் செய்தியாளரிடம் கூறுகையில் எங்கள்




சங்கத்தின் உறுப்பினர்கள் 2014இல் தொடர்ந்து நீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்தாமல், நீதிமன்ற தீர்ப்பைகளைப் புறந்தள்ளி எங்களின் வாழ்வாதாரத்திற்கும், முன்னேறத்திற்கும் தடையாக செயல்பட்டு வரும் மின்வாரிய உச்சபட்ச சட்டவிரோத போக்கின் உண்மை தன்மையை தமிழக அரசுஆய்வு செய்ய வேண்டும்.

மின்வாரியத்தின் சட்ட விரோத போக்கை தடுத்து நிறுத்த வேண்டிய தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் அலட்சிய போக்கினை கண்டிப்பதாகவும்

மேலும் இதைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் தமிழகஅரசு இதற்கு விரைவில் நல்ல முடிவை அறிவிக்க வேண்டும் என்றும் எங்களுடைய நியாயமான கோரிக்கை தமிழக அரசு ஏற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

என்ன கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளர். பொறியாளர் ஏ செந்தில்குமார், மாநில பொருளாளர் பொறியாளர் அலெக்ஸ் டேவிட் சன் உட்பட சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் இந்த கண்டன போராட்டத்தில் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

# நிறைந்தது மனம் புதுக்கோட்டை மாவட்டம் மடிகணினி வழங்கும் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்

கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" திருக்குறள்

தூய்மையாகவும் தெளிவாகவும் கல்வியை கற்று, கற்றதற்கு ஏற்ற வகையில் வாழ்க்கையில் நிலைபெற வேண்டும் என்ற திருக்குறளின் விளக்கத்திற்கேற்ப மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் மடிக்கணினி போன்ற நவீன கல்வி வசதிகளை வழங்கி, எதிர்காலத்திற்கு தகுதியான தலைமுறையை உருவாக்கிடவும், கல்வியே ஒரு சமூகத்தின் முதுகெலும்பு. அந்த கல்வியை எளிதாகவும், சமமாகவும், எதிர்காலத்திற்கு உகந்த வகையிலும் மாணவர்களுக்கு கொண்டு சேர்ப்பதே ஒரு நல்ல ஆட்சியின் அடையாளமாகும் என்ற வகையில், தமிழகத்தில் கல்வி வளர்ச்சியை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவர்களின் கனவுகளுக்கு மடிக்கணினிகள் வழங்கி புதிய சிறகுகளை அளித்துள்ளார்.





இந்த மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் தங்களின் கல்வி பயணத்தில் ஒரு முக்கிய திருப்பத்தை அடைந்துள்ளனர். பொருளாதாரத் தடைகளால் கணினி வசதி இல்லாமல் இருந்த மாணவர்களுக்கு, இந்த திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. ஆன்லைன் கல்வி, போட்டித் தேர்வுகள், திறன் மேம்பாடு, தொழில்நுட்ப அறிவு என பல துறைகளில் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பெரும் துணையாக உள்ளது.

இன்றைய உலகம் தொழில்நுட்பத்தோடு இணைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. அந்த உலகோடு ஒட்டிப் பயணிக்க, கணினி அறிவு இன்றியமையாததாக உள்ளது. இதை உணர்ந்த தமிழக அரசு, மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி, கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்பை வழங்கி வருகிறது. இது சமூக சமத்துவத்தையும், கல்வி நீதியையும் நிலைநாட்டும் ஒரு முன்னோடி முயற்சியாக விளங்குகிறது.

மடிக்கணினி திட்டத்துடன் மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கல்வி உதவித்தொகைகள், இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள், காலை உணவுத் திட்டம், உயர்கல்விக்கான வழிகாட்டுதல், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் போன்ற திட்டங்கள் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்கின்றன. எதிர்காலத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள், டிஜிட்டல் நூலகங்கள், ஆராய்ச்சி உதவித் தொகைகள் போன்ற திட்டங்களும் மாணவர்களுக்கு மேலும் பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

இளமையில் பெறும் கல்வியே வாழ்நாள் முழுவதும் வழிகாட்டியாக இருக்கும். அந்த கல்வியை தரமானதாகவும், காலத்திற்கு ஏற்றதாகவும் மாற்றுவதில் தமிழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை. குறிப்பாக, மடிக்கணினி வழங்கும் திட்டம் மாணவர்களின் சுயநம்பிக்கையை உயர்த்தி, அவர்களை உலகளாவிய போட்டிக்கு தயார்படுத்துகிறது.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைக்கும் மாணவர்களை தந்தைபோல் காக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்தகைய நலத்திட்டங்களை வழங்கி கல்வி எனும் ஒளியை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சேர்த்து உயரிய சேவையாற்றி, கல்வியே வலிமை; அந்த வலிமைக்கு வழிகாட்டும் ஆட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அசர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி என்ற உண்மை, இத்திட்டங்கள் மூலம் மீண்டும் உறுதியாகிறது.

'உலகம் உங்கள் கையில்" என்னும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 'உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ். ரகுபதி அவர்கள், கலந்து கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள்.








மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் கல்வி நலன் மீது மிகுந்த அக்கறை கொண்டு எண்ணற்ற கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், 'நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயிலப் 'புதுமைப்பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயிலத் 'தமிழ்ப் புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

'உலகம் உங்கள் கையில்" திட்டத்தில் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல் 202526ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் செயற்கை நுண்ணறிவு உலகெங்கும் பெரும் தாக்கத்தை உருவாக்கி வரும் இந்த வேளையில், நமது மாணவர்களின் தொழில்நுட்ப அறிவையும் அவர்களின் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் தொடர்ந்து வழங்கிட வேண்டிய வரலாற்றுச் தேவை தற்போது எழுந்துள்ளது. அதனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் பல்வேறு கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளிலும் பயின்று வரும் மாணவர்களுக்கு உயர்தொழில்நுட்பச் சாதனங்களை வழங்கிடத் திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக இந்நிதியாண்டில் 2000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பின்படி, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற 'உலகம் உங்கள் கையில்" என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் மாநிலம் முழுவதும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படும். அதன் முதல் கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் 1,235 மாணவிகளுக்கு மடிக்கணினிகள் இன்றையதினம் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இதர அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்து கல்லூரிகளுக்கும், கலை மற்றும் அறிவியல், வேளாண்மை, மருத்துவம், டிப்ளோமோ, ஐ.டி.ஐ ஆகிய 18 கல்லூரிகளில் பயின்றுவரும் இறுதி ஆண்டு மாணவர், மாணவிகளுக்கு சுமார் 5,674 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் கல்வியினை மேம்படுத்திடும் வகையில் செயல்படுத்தப்படும் இத்தகைய திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு கல்வியில் சிறந்து விளங்கி, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு இளங்கலை கணினி அறிவியல் பயின்று வரும் மாணவி பு.தாரணி தெரிவித்ததாவது:

என் பெயர் பு.தாரணி. நான் புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு இளங்கலை கணினி அறிவியல் பயின்று வருகிறேன்.

ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மாணவியான நான் இன்று உயர்கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றுள்ளேன். அரசின் பல்வேறு நலத்திட்டங்களே என்னை போன்ற மாணவிகளின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கி வருகின்றன. குறிப்பாக மாணவர்களுக்கான கல்வி உதவிகள், அடிப்படை வசதிகள், தொழில்நுட்ப ஆதரவுகள் ஆகியவை எங்கள் எதிர்காலத்தை உறுதியான பாதையில் கொண்டு செல்கின்றன.



மாணவி பு.தாரணி

இன்றைய உலகம் முழுவதும் தொழில்நுட்பம் சார்ந்த உலகமாக மாறி வருகிறது. கிராமப்புறம், நகர்ப்புறம் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் ஒரே வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழகஅரசு செயல்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் மடிக்கணினி வழங்கும் திட்டம், இன்றைய தொழில்நுட்ப சூழலுக்கு மாணவர்களை தயார் செய்யும் முயற்சியாக அமைந்துள்ளது. குறிப்பாக பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இது ஒரு பயனுள்ள ஆதரவாக இருக்கிறது. தகவல் தேடல், சுய கற்றல், பொதுத் திறன் வளர்ச்சி போன்ற தளங்களில் இந்த வசதி மாணவர்களுக்கு துணையாக இருந்து, கல்வியில் தன்னம்பிக்கையுடன் முன்னேற உதவுகிறது.

மாணவர்களின் கனவுகளை நனவாக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வரும் தமிழக அரசுக்கும், கல்வி வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் புதுக்கோட்டை மாவட்ட மாணவ மாணவிகள் சார்பில் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய நலத்திட்டங்கள் எங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையின் ஒளியாகத் திகழ்கின்றன என தெரிவித்தார்.

**தொகுப்பு**
**திருமதி.க.பிரேமலதா, எம்.காம்., பி.ஜி.டி.சி.ஏ.,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை மாவட்டம்**



■ தென்காசி மாவட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக நேற்று (06.02.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கை வசதிகளுடன் கூடுதல் மருத்துவமனை திறந்து வைக்கும் நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர். கலந்து கொண்டு பார்வையிட்டார்..




■ சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அமைந்துள்ள அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்கள், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஊதிய உயர்வை உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தி, கல்லூரி நுழைவாயில் முன்பாக முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# நூறு நாள் வேலைத்திட்டத்தில் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய மத்திய அரசை கண்டித்து கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி,பிப்.7-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், அன்னை சோனியா காந்தியால் கொண்டு வரப்பட்ட நூறு நாள் வேலைத்திட்டத்திற்கு வைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய மத்திய அரசின் மக்கள் விரோதப்போக்கை கண்டித்து, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கோபிநாத் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கிருஷ்ணகிரி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத் அவர்கள் கண்டன உரை ஆற்றினார்.




அப்போது அவர் பேசுகையில், நாட்டில் யாரும் பட்டினியால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, 2005ம் ஆண்டு மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் அன்னை சோனியா காந்தியால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி அளிப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த உன்னதமான திட்டத்தின் மூலம் கோடிக்கணக்கான மக்களின் பசியை போக்கிய காங்கிரஸ் அரசு, ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்தது. ஆனால், இந்த திட்டத்தை சிதைக்கும் வகையில் காந்தியின் பெயரை நீக்கியதோடு, நூறு நாள் வேலைத்திட்டத்தையே அடியோடு அழிக்க மத்திய அரசு செயல்படுகிறது. இதை காங்கிரஸ் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. மகாத்மா காந்தியின் பெயரை எந்த காரணத்தாலும் நீக்க அனுமதிக்க முடியாது எனக் கூறினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி. ரகு தலைமையில் நடைபெற்றது. இதில் கிராம கமிட்டி பொறுப்பாளர் அக. கிருஷ்ணமூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர் ஏகம்பவாணன், மாநில பொதுக் குழு உறுப்பினர்கள் ராஜேந்திரவர்மா, ஆறுமுகம், முன்னாள் மாவட்டத் தலைவர்கள் ராஜா குமாரவேல், காசிலிங்கம், ஜோசுதுரை, நாராயணமூர்த்தி, கிழக்கு மாவட்ட துணைத் தலைவர் பி.சி. சேகர், முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் துரை (துரைசாமி), மாவட்ட பொருளாளர் உமர், சேலம் ரயில்வே கோட்ட உறுப்பினர் தளபதி ரகமத்துல்லா, கிராம கமிட்டி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் தகி, நகர தலைவர் லலித் ஆண்டனி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், இந்த ஆர்ப்பாட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் குமரேசன், நகர மன்ற உறுப்பினர் வினாயகம், விவசாய சங்க மாவட்ட தலைவர் ராஜேந்திரன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் வின்சென்ட், முபாரக், சிறுபான்மை பிரிவு கிழக்கு மாவட்ட தலைவர் முனீர், கலைப் பிரிவு மாவட்ட தலைவர் கோவிந்தசாமி, தொகுதி பொறுப்பாளர் ஆடிட்டர் வடிவேல், நகர தலைவர்கள் யுவராஜ், ஸ்ரீராம், வட்டார தலைவர்கள் கல்லாவி ரவி, தனஞ்செயன், திருமால், சித்திக், செல்வராஜ், ஹரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கவியரசன், அப்சல், குட்டி, பாண்டுரங்கன், ஷானவாஸ், கருணாமூர்த்தி, மாரியப்பன், காவேரிப்பட்டினம் சரவணன், ரமேஷ் அர்னால்டு, வாஜித் பாஷா, மீனவரணி செல்வம் உள்ளிட்ட ஏராளமான பெண்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு, மத்திய அரசின் அடக்குமுறையை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161